**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.20/2020 - PW-8**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.ஏழுமலை | Occupation | கட்டிட தொழில் |
| Husband/ Father Name | திரு.கிருஷ்ணன் | Age | 54 |
| Village /Area | முப்பது வெட்டி | Religion | -- |
| Taluk | ஆற்காடு | Aadhar card No. | 8428 8715 6412 |
| District | இராணிப்பேட்டை | | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 17.07.2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் முப்படி வெட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கட்டிட வேலை செய்து வருகிறேன். என் ஊரை சேர்ந்த நடராஜன் என்பவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். அவர்கள் என் ஊரை சேர்ந்தவர்கள். கடந்த 10.03.2014-ம் தேதி மதியம் நான் வேலை முடித்துவிட்டு சாப்பிடுவதற்காக என் வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது முப்பது வெட்டி பேருந்து நிறுத்தம் அருகில் ஆற்காடு போலிசார் விக்னேஷ் என்பவரை என் ஊரை சேர்ந்த நடராஜன் என்பவரை தாக்கிய வழக்கு சம்மந்தமாக கைது செய்வதாகவும், அதற்கு சாட்சியாக இருக்கும்படியும் என்னை போலிசார் கேட்டுக்கொண்டார்கள். என்னுடன் பாலாஜி என்பவரும் இருந்தார். விக்னேஷ் என்பவரை போலிசார் கைது செய்து அதற்காக என்னிடமும், பாலாஜி என்பவரிடமும் சாட்சி கையெழுத்து வாங்கினார்கள். அதன் பிறகு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் விக்னேஷ் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1-வது கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான். அந்த என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.10** ஆகும். இது குறித்து ஆற்காடு போலிசார் என்னை விசாரித்தனர்.

(எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். **குறுக்குவிசாரணை இல்லை** என தெரிவிக்கப்பட்டு, அது பதிவு செய்யப்படுகிறது.)

Sd/-A.Balakrishnan,
I Additional District Judge,
Ranipet.